அ.வ.எண்: 22/2020 நாள்: 24.03.2026

வா.சா.1 – செந்தில்நாதன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>5,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சம்மத கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை விற்கக் கூடாது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா வழக்கின் 1,2 பிரதிவாதிகள் எனது தகப்பனார் என்று சொன்னால் சரிதான். தாவா வழக்கின் 3,4 பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் 3ம் பிரதிவாதி எனது தங்கை ஆவார். 4ம் பிரதிவாதி எனக்கு உறவினர் இல்லை. 5,6 பிரதிவாதிகளை எதற்காக தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்து உள்ளேன் என்றால், சொத்துக்களை இனாம் செட்டில்மெண்ட் மற்றும் கிரைய ஆவணம் மூலம் விற்பனை செய்துள்ளனர், அதை பதிவு செய்தனர் அதனால் அவர்களை தரப்பினராக சேர்த்தேன். எந்த சொத்துக்களை இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கொடுத்தார்கள் என்றால், சொத்தின் சர்வே எண் மற்றும் விவரங்கள் எனக்கு

தெரியவில்லை. 4ம் பிரதிவாதிக்கு எந்த சொத்து கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சர்வே எண் 157/2–ஐ 2ம் பிரதிவாதி கண்ணாத்தாள் கிரையம் கொடுத்துள்ளார்.

2. 2ம் பிரதிவாதி கண்ணாத்தாளுக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால், அது அவருக்கு கிரைய பாத்தியம் ஆகும். பொதுவாக ஒரு நபர் கிரையம் வாங்கிய சொத்தை அவரது விருப்பத்திற்கு ஏற்ப அவர் அதை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதுபோன்றுதான் 2ம் பிரதிவாதி தனக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்தை 4ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும் அதனைத் தான் 5ம் பிரதிவாதி பதிவு செய்துள்ளார் என்றும் சொன்னால் சரிதான். பொதுவாக ஒரு கிரைய ஆவணம் பதிவு செய்யப்படும்போது அந்த சொத்தின் மூலதஸ்தாவேசுகள் மற்றும் வில்லங்க சான்றிதழ் ஆகியவற்றை சரிபார்த்து விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். அவ்வாறு தான் 2ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தை 5ம் பிரதிவாதி பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். 5,6 பிரதிவாதிகள் தாவா வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றும், வேண்டுமென்றே அவர்களை தொந்தரவு செய்ய வேண்டும் என்பதற்காக தாவா வழக்கில்

அவர்களை தரப்பினராக சேர்த்து உள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

3. தாவா சொத்து சம்பந்தமாக எந்தவித பதிவு ஆவணங்களும் ஏற்படுத்தக் கூடாது என்று நான் 5,6 பிரதிவாதிகள் அலுவலகத்தில் மனு ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, மனு கொடுத்துள்ளேன். மேற்படி மனு சம்பந்தமான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சமாதான உறுதிமொழி பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை, பதிவு செய்யப்படாத ஆவணம் ஆகும். ஆவணம் பதிவு செய்யப்பட்டிருந்தால் தான் அதன் உண்மை தன்மையை நிரூபிக்க முடியும் என்றும், பதிவு செய்யப்படாத ஆவணம் செல்லதக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல, 2012 ஆம் ஆண்டிற்கு முன் பதிவு செய்யப்படாத ஆவணங்களும் செல்லத்தக்கது ஆகும். எதன் அடிப்படையில் நான் 2012 ஆம் ஆண்டிற்கு முன்பான ஆவணங்கள் பதிவு செய்யப்பட தேவையில்லை என்று கூறுகிறேன் என்றால், உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கூறுகிறேன். அந்த உத்தரவு நகலை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

4. ஒரு ஆவணம் பதிவு செய்யப்பட்டிருந்தால் தான் அது சட்டப்படி செல்லத்தக்கது ஆகும் என்றும், பதிவு செய்யப்படாத ஆவணம் சட்டப்படி செல்லதக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணமான சம்மத பத்திரத்தில் சாட்சிகள் எழுத்துக்கள் இல்லை என்றும், மேற்படி ஆவணத்தை யார் உற்பத்தி செய்தார்கள் என்ற விவரமும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி விபரங்கள் இல்லாததால் அந்த ஆவணம் செல்லதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 5,6 பிரதிவாதிகளை பொருத்தமட்டில் கிரைய ஆவணம் பரிசீலனை செய்யப்பட்டு தான் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 5,6 பரதிவாதிகளின் செலவு தொகையுடன் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.24 16:11:52 +0530